DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.303/2023**

Deposition of witness for Prosecution அ.சா.4

Name : வீராச்சாமி
Father/ Husband Name : முனியாண்டி
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 15.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் திராணியில் குடியிருந்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். விபத்தில் இறந்து போன சேகரை தெரியும். எதிரியை தெரியும். கடந்த 31.03.2018-ம் தேதி பகல் 12.00 மணியளவில் திராணியிலிருந்து புளியடிதம்பத்திற்கு சென்று கொண்டிருந்த வழியில் குமாரவேலூார் அருகே கூட்டமாக இருந்தது. நான் போய்பார்த்த போது சேகர் என்பவர் அடிபட்டு கிடந்தார். நான் சேகரின் மனைவிக்கு தகவல் கொடுத்து அவரை வரச்சொன்னேன். சேகரை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்து சென்றார்கள். சேகருக்கு தலையில் காயம் ஏற்பட்டு இருந்தது. பின்னர் சேகர் இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 என் ஊரை சேர்ந்தவர். அ.சா.1 எனது ஊர்க்காரர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.303/2023**

Deposition of witness for Prosecution அ.சா.5

Name : இராமநாதன்
Father/ Husband Name : சோலைமலை
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 15.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் திராணியில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை பார்க்கிறேன். கடந்த 4,5 ஆண்டுகளுக்கு முன்பு காலை 10.00 மணியளவில் திருவேகம்பத்துார் போலீசார் ஊர்திக்கோட்டை விபத்து நடந்த இடத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். (**மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன இருந்தது என்று படித்துப் பார்க்கவில்லை. என்னிடம் கையெழுத்து பெற்ற பேப்பரில் கையால் எழுதப்பட்டு இருந்ததா, தட்டச்சு செய்யப்பட்டு இருந்ததா என்றால் ஸ்டேஷ னிலிருந்து கையால் எழுதிக் கொண்டு வந்திருந்தது போல் தான் இருந்தது. நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போடவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

2. அ.சா.1 எனக்கு தங்கை. அ.சா.1 எனது தங்கை என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** **இல்லை.**

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.